மலர் - 35
இதழ் - 10
அக்டோபர் 2022

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
தனிப்பிரதி ரூ.10/-
Annual Subscription Rs.100/-



ஏற்காடு கூட்டத்தின்போது...
(அக்டோபர் 06,07 - 2022)

# 25 – ம் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி






## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. அற்புதங்கள் எங்கே ? 11
3. பெண்கள் பகுதி 13
4. வாலிபர் பகுதி 16
5. சிறுவர் பகுதி 18
6. தேவ பக்திக்குரிய இரகசியம் 20
7. கிறிஸ்து என்னும் மார்க்கம்... 24
8. இனி நீ பாவம் செய்யாதே 28
9. விருத்தசேதன உடன்படிக்கை. 32




**கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த காங்கயம் சபை குடும்பத்துப் பிள்ளை ஜேக்கப்**

THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol.35 October - 2022 Issue - 10

ஆசிரியர் உரை

# சர்வ வல்லவரை நாம் சேவிக்க அவர் யார்?

**கே**ள்விகளில் பல வகைகள் உண்டு என்பது நாமறிந்ததே. அவைகளில் ஒன்று, பேசப்படும் ஒரு நபர் பற்றி அல்லது சந்திக்கப்படும் ஒரு நபர் பற்றி எவ்விப் புரிதலும் இல்லாத நிலையில், அவர் பற்றித் தெரிந்து கொள்ளும்படியாகக் கேட்பது. மற்றொன்று சம்பந்தப்பட்ட நபர் யார் என்று திட்டமும், தெளிவாகத் தெரிந்த நிலையில், அவரை அற்பமாக எண்ணி மேட்டிமைச் சிந்தை கொண்டு **அவர் யார்?** என்று கேட்பது. நமது தலைப்பிலுள்ள கேள்வி இந்த இரண்டாம் வகையைச் சார்ந்தது. இக்கேள்வியை யோபு நூலில் நாம் வாசிக்க முடியும். சர்வ வல்லவரை நாம் சேவிக்க அவர் யார்? அவரை நோக்கி ஜெபம் பண்ணுவதினால் நமக்குப் பிரயோஜனம் என்ன? என்கிறார்கள் என்று. 21:15]

இவ்வரிகள் யோபுவின் வாயிலிருந்து வந்தவைகள் போன்று தோன்றினாலும், உண்மையில் யோபுவின் வார்த்தைகள் அல்ல. மாறாக, யோபுவின் மூன்று நண்பர்களில் ஒருவனாகிய நாகமாத்தியனான சோப்பாரின் சொத்தையான வார்த்தைகளுக்கு யோபு பிரதியுத்திரம் சொன்னபோது துன்மார்கன் ஜீவித்து விருத்தராகி வல்லவராவது சம்பந்தமாகப் பேசுகிறார். அப்போது அவர்களின் துணிகரச்சிந்தை இப்படியாக இருக்கிறது என்று எடுத்துரைக்கிறார். சர்வ வல்லவர் யார் என்று கேட்கும் அக்கிரமச் சிந்தைக்குச் சொந்தக்காரர்கள் எல்லாக் காலத்திலும் இருந்துள்ளார்கள், நம்முடைய நாட்களிலும் இருக்கிறார்கள்.

மேலும் தொடர்வதற்கு முன், ஆசானின் ஆசாரப்படி சில பின்னணிக் காரியங்களுக்குள்ளாகக் கடந்து வந்து விடுவோம்.

பக்தன் யோபு பற்றிப் பேச, எழுத நேரும் போதெல்லாம் ஓர் பிரமிப்பு மனநிலைக்குள் நான் தள்ளப்படுவேன். என்ன தான் மனிதனோ,

எப்படித்தான் இப்படி வாழ்ந்தானோ என்று வியந்து நிற்பேன். பல பழைய ஏற்பாட்டு தேவ மனிதர்களால் நான் கவரப்பட்டிருந்தாலும், யோபுவின் மீதான ஈர்ப்பு வித்தியாசமானது. பக்தன் யோபுவை என் மானசீக தேவ தாசனாக ஏற்றிருக்கிறேன். யாரால் இப்படிச் சொல்ல முடியும்? **நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்று** (யோபு 1:21) இவன் பற்றி எழுதுவதற்கு எனக்கென்ன அருகதை இருக்கிறது என்ற கேள்வியோடு தான் எப்போதும் எழுதுவேன்.

இம்மாமனிதனுக்கு ஏற்பட்ட தீங்குகளையம், இழப்புகளையம் கேள்விப்பட்ட யோபுவின் மூன்று நண்பர்களாகிய தேமானியனான எலிப்பாசு, சூகியனான பில்தாது, நாகமாத்தியனான சோப்பார் தங்கள் தங்கள் ஊர்களிலிருந்து புறப்பட்டு வந்து, அவனுக்காகப் பரிதபிக்கவும், அவனுக்கு ஆறுதல் சொல்லவும். அவனோடு வந்து உட்கார்ந்தார்கள். இவர்களின் செயலைப் பார்த்தால் நல்ல நண்பர்கள் போல் தெரிகிறது. ஆனால், சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான் (நீதி 17:17) என்ற ஞானியின் வார்த்தைகளுக்குச் சற்றும் சம்பந்த மில்லாதவர்களாகவே நடந்து கொண்டார்கள். ஆம், ஆறுதல் என்ற பெயரில், சுடு சொற்களால் யோபுவைக் காய்படுத்திப் புண்படுத்தி வெந்த புண்ணில் ஈவு இரக்கமில்லாமல் வேலைப் பாய்ச்சினார்கள். மூன்று சுற்றுகளாக நடந்த இவர்களில் பேச்சுக்களுக்கு யோபு எவ்வளவோ விளக்கம் கொடுத்தும் இவர்கள் தங்கள் தாக்குதலை நிறுத்தவில்லை. பொறுமைக்காக தேவனால் மெச்சப்பட்ட (யாக் 5:11) யோபுவே ஒரு கட்டத்தில் பொறுமையிழந்துவிட்டார். ஆம், கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சாத குறையாக **எல்லோரும் போய் வாருங்கள்** (யோபு 17:10) என்று கெஞ்சினான்.

அதிலும், இந்த சோப்பார் இருக்கிறான் அல்லவா, இவன் சுத்த மோசம். கிஞ்சித்தும் கூச்சமில்லாமல், ஞானமாகவும், பொறுமையாகவும் இவர்கள் சத்தற்ற கூற்றுக்களுக்கு பதிலளித்து வந்த யோபுவை **வாய்ச்சாலகன் நீதிமானாய் விளங்குவது எப்படி? (11:2) என்றும், உம்முடைய அக்கிரமத்துக்கேற்றபடி தேவன் உம்மைத் தண்டிக்க வில்லையென்று அறிந்துகொள்ளும்** (11:6) என்று கூறி யோபுவை நிலைகுலையச் செய்ததோடு நிற்காமல், பரலோக தேவனால் சன்மார்க்கன், உத்தமன் என்று புகழப்பட்ட இந்த பக்தனை **துன்மார்க்கன், மாயக்காரன்** என்று நா கூசாமல் இழிவான வார்த்தைகளைப் பரிசாகக் கொடுத்தான். இந்த வார்த்தைகள் தேவன் சொன்னதற்கு எதிரானவைகளாக இருந்தபடியால், தேவன் இவன் மீது கோபமடைந்தார் என்றே தெரிகிறது. எப்படியெனில், மற்ற இரண்டு நண்பர்களுக்கு மூன்றாம் சுற்றுப் பேச்சுக்கு அனுமதியளித்த தேவன்

இவனுக்கு மறுத்துவிட்டார். ஆம், **சோப்பாரே போதும் நிறுத்து** என்று கூறிவிட்டார். அவருடைய பிள்ளைகள் ஓர் எல்லைக்கு மேல் தொல்லைக்குள்ளாவதை தேவன் அனுமதிப்பதில்லையென்பது நமக்கு ஆறுதலான செய்தி.

சரி, இந்த சோப்ளாங்கி சோப்பாருக்கான இரண்டாம் சுற்றுப் பதிலில் தான் நம் தலைப்பு வருகிறது. துன்மார்க்கர் செழித்து ஓங்குவது சம்மந்தமாக அங்கே யோபு பேசுகிறார். துன்மார்க்கர் தழைத்து வாழ்வது ஏன் என்பது காலம் காலமாகக் கேட்கப்படும் கேள்வியாக உள்ளது. இக்கேள்வி, சங்கீதக்காரர்களில் ஒருவனாகிய ஆசாப்புக்கும் இருந்துள்ளது. துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக் காரராகிய அவர்கள் மேல் பொறாமை கொண்டேன் என்று கூறுகிறான் (சங் 73:3) நம்முடைய நாட்களிலும் இக்கேள்வி அதன் வீரியம் குறையாமல் பலருடைய உள்ளங்களில் பதுங்கி இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட மனநிலை கொண்டவர்களுக்கான ஒட்டுமொத்த பதிலாக யோபுவின் வாழ்க்கை அமைந்துள்ளது. ஆகையால், எந்தக் கட்டத்திலம் எந்த இடத்திலும் தேவநீதியை நாம் சந்தேகித்து, சாத்தானுக்கு இடம் கொடுத்து விடக்கூடாது.

துன்மார்க்கர் மனநிலை சம்பந்தமாக யோபு வெளிப்படுத்திய வாக்கியம் தான் **சர்வ வல்லவரை நாம் சேவிக்க அவர் யார்?** என்பது. இப்படிக் கேட்டு மண்ணைக் கவ்விய ஓர் அரசன் தான் பார்வோன். மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் போய் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் வனாந்திரத்திலே எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி என்ஜனங்களைப் போகவிட வேண்டுமென்று செல்கிறார் என்று கேட்ட போது, **இஸ்ரவேலைப் போக விடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்?** நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை என்றான் (யாத் 5:1 2) ஆனால், பத்து வாதைகளால் அவனும், அவன் தேசத்துக் குடிகளும் அடுத்தடுத்து வாதிக்கப்பட்ட போது, நடு இராத்திரியிலே, மோசேயையும், ஆரோனையும் அழைப்பித்து; நீங்களும், இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து, **என் ஜனங்களை விட்டுப் புறப்பட்டுப் போங்கள்** என்று சொன்னான். தன்னையே ஒரு கடவுளாக நினைத்துக்கொண்ட பார்வோனின் திமிர் பேச்சு எத்தனை நாள் தாக்குப் பிடித்தது? தேவக் காரியத்தில் கவனமாகவும், எச்சரிப்பாகவும் இருப்பது எல்லோருக்கும் நல்லது?

சரி, சர்வ வல்லவரை நாம் சேவிக்க அவர் யார்? என்பது தான் கேள்வி. சேவிப்பது என்பது ஆராதனை அல்லது தொழுகை சம்பந்தப்பட்ட வார்த்தை அல்ல. ஒருவேளை, இதையும் நாம் உள்ளடக்கிக் கொள்ள முடியும். ஆனால், அதைத்தாண்டி இன்னும் மேலான பொருள் உண்டு. **தேவன் கட்டளையிடும் எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்வது** மற்றும் **அவருடைய**

**ஆளுகையை அங்கீகரித்து ஏற்றுச் செயல்படுவது.** யோசுவா இப்பொருளை முழுமையாக உள் வாங்கியவராகவே நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று சூளுரைத்தார் (யோசுவா 24:15)

இப்படிச் சபதமேற்பதற்கான அடிப்படை, சர்வவல்லவர் யார் என்பதை, அதாவது அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்பதை யோசுவா வார்த்தையிலும், வாழ்க்கையிலும், அறிந்து வைத்திருந்தார். இப்பேருண்மை யோபுவின் நாட்களில் வாழ்ந்த துன்மார்க்கர்களுக்கும், பார்வோன் போன்ற மூட மன்னர்களுக்கும் தெரியவில்லை . பொய்யுரையாத தேவன் தன்னைப் பற்றிச் சொல்லும் போது, **நான் சர்வ வல்லமையுள்ள தேவன் என்றும் (ஆதி 17:1). பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும், நடப்பிக்கிறவர் என்றும் (எரே 9:24) என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ?** என்றும் (எரே32:27) கூறுகிறார். இவர் தான் பரலோகத்தின் தேவன். இவரைச் சேவிப்போம் என்று தான் யோசுவா சூளுரைத்தார். ஆனால், சர்வ வல்லரை சேவிக்க அவர் யார் என்று கேட்டவர்களும், கேட்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அன்பானவர்களே, சர்வ வல்லவராகிய கர்த்தர் யார் என்ற கேள்விக்கான விளக்கவுரையாக பவுலடியாரின் மார்ஸ்மேடைப் பிரசங்கம் உள்ளதால்(அப். 17ம் அதி). நாம் அங்கு போய் நம் தலைப்பிற்கான பதிலை பெற்றுக் கொள்ள முயற்சிப்போம். சரியா?

மார்ஸ்மேடை அமைந்திருந்த அத்தேனே பட்டணம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அன்றைய உலகின் மிக அழகான பட்டணங்களுள் ஒன்று . பட்டணத்துக்குள்ளாக நான்கு குன்றுகளும் பட்டணத்தைச் சுற்றி நான்கு மலைகளும் இருந்தது. இந்த அழகு மிகு பட்டணத்திற்குள்ளாக இருந்த மார்ஸ் மேடையில் ஏறி நின்று பேசுவதற்கான வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்காது. அத்தேனே பட்டணத்தின் கனவான்களுக்கும், தத்துவமேதைகளுக்கும், மிகச்சிறந்த சொற்பொழிவாளர்களுக்கும் இம்மேடை தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அத்தேனே பட்டணத்தில் அறிவாளிகளுக்கும், ஞானிகளுக்கும் பஞ்சமில்லை. ஏனெனில், அன்றைய உலகின் பேர் சொல்லும்படியான பல்கலைக்கழகம் அங்கிருந்தது. இம்மேடையில் நிற்கும்படியான வாய்ப்பு புதிய ஏற்பாட்டில் என் மானசீக தேவ தாசனாக இருக்கும் பவுலடியாருக்குக் கிடைத்தது.

அத்தேனே பட்டணத்தில் இருந்த எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் போன்ற ஞானிகளில் சிலர் பவுலோடு பக்தி காரியங்கள் சம்பந்தமாக வாக்குவாதம் செய்து ( அப் 17:18) வெற்றி கொள்ளமுடியாத நிலையில் , சரி இந்த வாயாடி என்ன தான் பேசுகிறான் என்று தெரிந்து கொள்வதற்காக மார்ஸ் மேடையேற்றிப் பேச அனுமதித்தார்கள்.

ஞானிகளும், பேராசிரியர்களும், முக்கியமானவர்களும் சூழ்ந்திருக்கப் பவுலடியார், அவர்கள் **அறியாமல் ஆராதிக்கிற,** சர்வவல்லவர் யார் என்பதைப் படம் போட்டு விளக்கிக் காட்டினார்.

**I. சர்வ வல்லவர் தான் எல்லாவற்றையும் உண்டாக்கினவர் (அப் 17:24)**

மெத்தப் படித்தவர்கள் சூழ நின்ற மார்ஸ் மேடைப் பிரசங்கத்தில், அத்தேனர் அறியாமல் ஆராதித்த தேவன் பற்றிப் பவுலடியார் எடுத்துரைத்த உண்மை, அவர் உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கின தேவன் என்பது.

இந்த உண்மையைத்தான் பரிசுத்த வேதாகமத்தின் முதல் வசனமும் கூறுகிறது. **ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தார்** என்று [ஆதி 1:1] உங்களுக்குச் சொல்லப்பட்டு, தூரத்திலே தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று நம்பப்படுகின்ற எப்பிக்கூரரின் தேவனல்ல அவர். இன்னும், உங்களால் ஆராதிக்கப்படுகின்ற எண்ணிறைந்த தேவர்களில் இவர் ஒருவரல்ல. அந்தத் தேவர்களோடு வானத்தையும், பூமியையும் உண்டாக்கினவரை ஒப்பிட்டு நீங்கள் குழம்பித் தடுமாற வேண்டாம். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிறீர்கள் அல்லவா அவரைத்தான் நான் அறிவிக்கிறேன் என்ற உண்மையை முதலாவது பதிய வைக்கிறார்.

நீங்கள் ஆராதிக்கும் மற்ற தேவர்கள் போல் அவருக்குப் பீடங்களும், பலிபீடங்களும், கோயில்களும் தேவையில்லை. ஏனெனில், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவராக இருக்கக் கூடியவருக்கு நம்மால் கோயில் கட்ட முடியாது.

**II. சர்வ வல்லவர் ஜீவனையும், சுவாசத்தையும் கொடுக்கிறவர் (அப் 17:25, 28-29)**

மெத்தப் படித்தவர்களுக்கு மத்தியில் மார்ஸ் மேடையில் நின்ற பவுலடியார் அத்தேனருக்கு அடுத்ததாகக் கூறியது, அவர்தான் எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் கொடுக்கிறார் என்பது.

ஆதியிலே தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். [ஆதி 2:7]. உயிரை மாத்திரம் தேவன் கொடுக்காமல் தொடர்ந்த வாழ்வதற்கான சுவாசத்தையும் அவர் கொடுத்திருக்கிறார். ஆகவே தான் கீழ்வரும் 28 ம் வசனம் இப்படியாகக் கூறுகிறது. ஏனெனில் **அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைக்கிறோம், இருக்கிறோம்** என்று. இதே உண்மையை யோபு நூலில் நாம் இப்படியாகப் பார்க்கிறோம். சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷன் ஆவியும் அவர் கையிலிருக்கிறது என்று [யோபு. 12:10].

இங்கே பவுலடியார் இந்த சர்வ வல்லவரை நீங்கள் தேவர்களாக ஏற்றுக் கொண்டிருப்பவைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள் என்று

சொல்லாமல் சொல்கிறார். அதற்கு சாட்சியாக அவர்களுடைய புலவர்களையே அவர்களுக்கு முன் கொண்டு வந்து காட்டுகிறார். நான் மட்டுமல்ல உங்கள் புலவர்களும் **நாம் அவருடைய சந்ததியார்** என்று சொல்லியிருக்கிறார்கள் என்று. உண்மை இப்படியிருக்க... மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல், இவைகளுக்கு தெய்வங்கள் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்க முடியாது தானே என்று கூறி தன்னுடைய வாதத் திறமையால் அங்கிருந்த அறிவு ஜீவிகளை திணறடிக்கிறார்.

## III சர்வ வல்லவர் சகல ஜாதிகளையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணியிருக்கிறார் (17:26)

மெத்தப் படித்தவர்களுக்கு மத்தியில் மார்ஸ் மேடையில் நின்ற பவுலடியார் அத்தேனருக்கு அடுத்ததாகக் கூறிய காரியம், சகல தேசத்தாரையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணியிருக்கிறார் என்பது.

பாருங்கள், மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும், அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார் என்று. [17:26] முந்தின வசனங்களில் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் என்றும், உண்டாக்கினதோடு நிற்காமல் எல்லோருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் கொடுக்கிறவர் என்று கூறிவிட்டு, எல்லா தேசத்தாருக்கும் **ஒரே இரத்தம்** என்று ஓங்கி ஒரு போடு போடுகிறார் ஆதியிலே ஆதாம், ஏவாளைப் படைத்து பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள் என்றதால் தான் பூமியெங்கும் மனிதர்கள் பரவியுள்ளனர். எல்லோரும் அந்த ஆதிப்பெற்றோர் வழி வந்தவர்களே. நிறங்கள் மாறுபட்டாலும், மொழிகள் மாறுபட்டாலும், தோற்றம் மாறுபட்டாலும் இரத்தம் ஒன்றே.

உண்மைநிலை இப்படியிருக்க, சமுதாய ஏற்றத்தாழ்வுகள் எங்கிருந்து வந்தது? எல்லோருக்குள்ளும் ஒரே இரத்தம் ஓடும் போது நான் பெரியவன், நீ தாழ்ந்தவன் என்று ஒருவரைப் பார்த்தோ, ஒரு கூட்டத்தாரைப் பார்த்தோ ஒருவனால் எப்படிச் சொல்லமுடியும்? பவுலடியார் இதைப் பேசினதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஆம், எப்படி யூதர்கள், நாங்கள் மெய் தேவனுடைய சந்ததி, ஆபிரகாமின் பிள்ளைகள் என்றெல்லாம் ஒரு மேட்டிமை கொண்டு புறவினத்தாரை அற்பமாக எண்ணினார்களோ, அதுபோல இந்த கிரேக்கருக்கும் ஓர் அடங்காச் சிந்தை இருந்தது. தேசப் பெருமைக்கும், ஞானத்திற்கும், கலாச்சாரத்திற்கும் நாங்கள் பேர் பெற்றவர்கள், எங்களுக்கு இணை யாருமில்லை என்ற செருக்கோடு வலம் வந்தார்கள். எல்லோருக்கும்

ஒரே இரத்தம் என்று சொன்னதின் மூலம் அவர்களின் அச்சிந்தைக்குச் சவுக்கடி கொடுத்தார்.

யூதர்களுக்குள்ளும், கிரேக்கர்களுக்குள்ளும் இந்த மேட்டிமை இருந்தால் தொலையட்டும். கிறிஸ்தவர்களையும் இக்கேடு பாடாய்ப் படுத்துகிறதே. இந்தியக் கிறிஸ்தவம் சாதியச் சிந்தைக்குப் பாடை கட்டி புதை குழிக்குள் தள்ள முடியாமல், கடப்பாறையை விழுங்கின கதையாகச் சீரணிக்க முடியாமல் பிரசவ வேதனைப்படுகிறதே. ஒரே இரத்தம் எல்லோருக்கும் என்று வேதம் கூறும் போது வேறுபாடு எப்படி நியாயமாகும்? சிந்தியுங்கள்.

**IV சர்வ வல்லவர் சகல ஜனங்களுக்கும் கட்டளையிடுகிறவர்**

மெத்தப் படித்தவர்கள் மத்தியில் மார்ஸ் மேடையில் முழங்கின பவுலடியார் அடுத்ததாக வெளிப்படுத்தியது சர்வ வல்லவர் எல்லோருக்கும் கட்டளையிடுகிறவர் என்பது.

**அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்** (அப். 17:30) கட்டளையிடுவதற்கு ஒருவர் அதிகாரம் உடையவராயிருக்க வேண்டும். சர்வ வல்லவர் சகல அதிகாரம் உடையவர் என்பதை அவர்கள் மனதில் ஏற்றிவிட்டு, பிறகு அவர் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறார். **எங்குமுள்ள மனுஷர் யாவரும் மனந்திரும்ப வேண்டுமென்று. இது ஆலோசனை அல்ல, வேண்டுகோள் அல்ல, மறாக ஒரு கட்டளை. ஆம், ஆண்டவரின் கட்டளை. சரி, ஏன் மனந்திரும்ப வேண்டும்?** அதற்கு பதில் உண்டு. **அறியாமை உள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்.**

அப்படியானால், எது அறியாமையின் காலம்? கிறிஸ்துவின் மூலம் தேவச் சித்தம் வெளிப்படுவதற்கு முன்னான காலம் அறியாமையின் காலம். அஞ்ஞானிகளின் கடந்த காலம். விக்கிரகங்களுக்கு அடிமைப்பட்ட அறியாமையின் காலம் ஆம், அந்தக் காலம் அறியாமையின் காலம் என்று அத்தேனரும் ஒரு வகையில் ஒத்துக் கொண்டனர். எப்படியெனில், **அறியப்படாத தேவனுக்கு** என்று ஒரு பலிபீடத்தை வைத்திருந்தனர். உங்களுடைய அந்த அறியாமையின் காலத்தை தேவன் கானாதவர் போலிருந்தார். ஆனால், இப்பொழுது உங்களால் அறியப்படாமல் இருந்த அந்த சர்வ வல்லவர் பற்றிய சகல உண்மைகளும், நீங்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கதக்கதாய் வெளிப்படுத்தப்பட்டாயிற்று. ஆகவே, போக்குச்சொல்ல இடமில்லை, ஆண்டவர் கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள் என்று நெருக்குகிறார்.

ஒருவேளை, கிறிஸ்துவின் உபதேசம் பற்றியும், கிறிஸ்துவினால் கிடைக்கும் இரட்சிப்பு பற்றியும், கிறிஸ்து கட்டின ஒன்றான மெய் சபை பற்றியும், நீங்கள் இதுகாறும் அறியாமலிருந்தால், நாங்கள் உங்களுக்கு பல வழிகளில் அறிவித்துக் கொண்டு வருகிறோம். அத்தேனர் போன்று

நீங்களும் உண்மையை, உண்மையான சபையை ஏற்றுக் கொள்ளும் படியாய் மனந்திரும்ப வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

### V சர்வ வல்லவர் நித்தியத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் (17:31).

மெத்தப் படித்தவர்கள் மத்தியில் மார்ஸ் மேடையில் நின்று பிரசங்கித்த பவுலடியார், முடிவாகச் சொல்வது அவர் தான் நித்திய வாழ்வைத் தீர்மானிக்கிறவர் என்பது.

மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனைக் மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிசசயத்தை எல்லோருக்கம் விளங்கப் பண்ணினார் என்றான். எபிரெயர் ஆசிரியர், **அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று கூறியுள்ளார்.** [ எபி. 9:27]. இன்னும், பவுலடியார் கொரிந்தியருக்குச் சொல்லும் போது, ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் என்று கூறியுள்ளார் [II கொரி 5:10].

இப்படிப் பவுலடியார் நியாயத்தீர்ப்பு குறித்து அத்தேனருக்கு எடுத்துரைக்கும் போது அத்தத்துவ மேதைகளுக்குச் சந்தேகம் வரும் என்பதைக் கண்டு, இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதை ஆதாரமாகக் காட்டுகிறார்.

ஆம், அருமையானவர்களே! நாம் யாராக இருந்தாலும் மரித்தோரின் உயிர்தெழுதல் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது. மரித்தோரி உயிர்த்தெழுதலின் போது, நாம் வலது பக்கத்தில் நிற்பவர்களாக காணப்பட வேண்டுமானால், **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என அழைத்து** [மத். 25:34]. நித்திய ஜீவனை சுதந்திரிக்க வேண்டுமானால் அத்தேனருக்கு சொல்லப்பட்டது போல் நாமும் மனம்திரும்பி கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தக்கு நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். சரியா?

சர்வ வல்லவர் யார் என்று யோபுவைக் கொண்டு எழுதப்பட்ட கேள்விக்கு, பவுலடியார் முலமாக நாம் பதில் பெற்றுள்ளோம். இப்படிப்பட்ட சர்வ வல்லவரை நாம் உண்மையாய் சேவித்து இம்மையையும், மறுமயையும் சதந்தரித்துக்கொள்ள எல்லாவித முயற்சிகளையும் எடுப்போம்! ஆமென்!!

✝

# அற்புதங்கள் எங்கே?

## J.C. சோட்

ஒரு சில வாரங்களுக்கு முன்பு, ஒரு வானொலியில் பிரசங்கியார் ஒரு கூட்டத்திற்கான விளம்பரம் செய்தார். அந்த விளம்பரம் இப்படியாக இருந்தது. சம்பந்தப்பட்ட ஊழியர் தேவனால் அபிஷேகம் பெற்றவராக இருப்பதால், அற்புத சுகமளிக்கும் கூட்டம் நடத்தப் போகிறார் என்று. அச்சமயத்தில் நான் அப்பகுதியில் இருந்தேன். அற்புதங்கள் அக்கூட்டத்தில் நடத்தப்பட்டதாகச் செய்தி எதுவுமே வரவில்லை. அவர் சொன்னபடி அற்புதம் செய்ததாக யாரும் அங்கு பேசவில்லை. செய்தித்தாளில் இது சம்பந்தமாக செய்தியும் வரவில்லை. அக்கூட்டம் பற்றி ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. அந்த விளம்பரத்தில் அக்கூட்டம் பற்றி நான் கேள்விப்படவில்லையென்றால், அப்படி ஒரு கூட்டம் நடந்ததாகவே தெரிந்திருக்காது. வேதாகமத்தில் சொல்லப்பட்டடிருப்பது போல ஒரு அற்புதம் நடந்திருந்தால் அந்தப் பட்டணம் முழுவதும் அந்தப் பேச்சாகவே இருந்திருக்காதா? ஆனால், அப்படி எதுவும் இல்லை. இதிலிருந்து எந்த ஒரு அற்புதமும் அக்கூட்டத்தில் நடக்கவில்லையென்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

பிறகு இந்த அற்புத சுகமளிக்கும் கூட்டம் பற்றிய சுவரொட்டிகளைப் பட்டணத்தின் பல இடங்களில் பார்த்தேன். அப்பொழுது இக்கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. ஆயினும், பட்டணத்தார் ஒருவரும் இதைப் பற்றி பேசவில்லை. அவர்கள் சொன்னது போல ஏதாவது அற்புதம் நடந்திருந்தால், கண்டிப்பாக பலபேர் அதுபற்றி பேசியிருப்பார்கள். எந்தவொரு அற்புதமும் அக்கூட்டத்தில் நடைபெறவில்லையென்ற முடிவுக்கு நாம் இதன் மூலம் கண்டிப்பாக வர முடியும்.

ஒரு சமயம் இப்படிப்பட்ட கூட்டங்களை ஏற்பாடு செய்யும் பெந்தெகொஸ்தே சபைப் பிரிவார் மற்றும் அசெம்பளீஸ் ஆப் காட் சபைப் பிரிவினரைப் பற்றி பேச்சு வந்தது. அப்பேச்சினூடே இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு வரும் மக்கள் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து வரவேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட கூட்டத்தாரால் வசீகரிக்கப்பட்ட ஒரு பெண்ணிடம் பேசிய போது, கர்த்தர் பாஸ்டர் பால் அவர்களுக்குத் தரிசனமாகி ஒற்றுமைக்கான ஒரு திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்று சொன்னார். இதே பெண், எனக்கு நன்கு தெரிந்த பெந்தெகொஸ்தே பாஸ்டர் பெயரைச் சொல்லி கர்த்தர் அந்தப் பாஸ்டர் மூலமாகக் கிரியை நடப்பித்துக் கொண்டுள்ளார் என்றும் சொன்னார். அந்தப் பாஸ்டர் ஒரு முறை என்னைத் தொடர்பு கொண்டு, பாஸ்டர் நான் பெந்தெகொஸ்தே பிரிவிலிருந்து வில உண்மைச் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, கர்த்தராலே அவருடைய சபையிலே சேர்க்கப்பட ஆசையாயிருக்கிறேன் என்றார். சொன்னது போல், கீழ்ப்படியவும் செய்தார். ஆனால், அவருக்கு நாங்கள்

மாதாந்திர சம்பளம் கொடுக்க முன் வராததால் ஆர்வம் இழந்து மீண்டும் பெந்தெகொஸ்தே கூட்டத்திற்குத் திரும்பிவிட்டார். அவர், அக்கூட்டத் தாருக்கு மத்தியில் நற்பெயரோடு இருந்தபடியால், அவர் உண்மையா கவே ஒரு தேவ மனிதர் என்றும், அற்புதங்களை நடப்பிக்கக்கூடியவர் என்றும் எண்ணியிருந்தனர். பணத்துக்காக ஆசைப்பட்டவர் எப்படி தேவ மனிதர் என்றழைக்கப்பட தகுதியானவராக இருக்க முடியும்? கேலிக்கூத்தாக உள்ளது.

மனிதர்கள் ஆவிக்குரிய ரீதியில் வஞ்சிக்கப்பட்டு, பொய் உபதே சங்களுக்குள்ளாக வழிநடத்தப்படுவது எவ்வளவு சுலபமாயிருக்கிறது என்று பாருங்கள்! அநேகர், தவறாக வலிநடத்தப்படுவது மாத்திரமல்ல வஞ்சிக்கப்படவும் விருப்பம் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆகவே, இத்தலைப்பு பற்றி, வேதாகமம் என்ன சொல்லுகிறதென்பதைக் கவன மாகக் கவனியுங்கள்.

கிறிஸ்துவின் காலத்திலும் அப்போஸ்தலர்கள் காலத்திலும் காரியங் கள் எப்படி வித்தியாசமாக இருந்ததென்பது சுவாரசியமாக உள்ளது. கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் அற்புதம் செய்தார்கள். ஆனால், அது பற்றி எந்த விளம்பரமும் செய்யவில்லை. கூட்டத்தைக் கவருவத ற்கான எந்த யுக்தியையும் மேற்கொள்ளவில்லை. அற்புதங்கள் நடக்கப் போகிறதென்று யாரையும் கூவி அழைக்கவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் தாங்கள் செய்த அற்புதங்கள் மூலம் பிரபலமடைவதற்கோ அல்லது பிணியாளிகளைச் சுகமாக்கவோ கூட செய்யவில்லை. ஜனங் கள் பரிபூரண சுகத்தோடிருப்பதற்குத் தகுதியானவர்களாக இருக்கிறபடி யால், தங்கள் விசுவாசத்தின் மூலம் அதை அவர்கள் பெற்றுக் கொள்ளட் டும் என்றும் பிரசங்கிக்கவில்லை. மாறாக, அவர்கள் அவிசுவாசிகளி டத்தில் தங்கள் காரியங்களை நடத்தினபடியால், அவர்களை விசுவாச முள்ளவர்களாக மாற்றும்படியாகவும், அவர்கள் பிரசங்கிக்கும் செய்தியா னது தேவனிடத்திலிருந்து வந்ததென்பதை உறுதிபண்ணும்படியும் சில அற்புதங்கள் அவர்கள் மூலம் நடப்பிக்கப்பட்டன.

**தொடரும் ...**

### இயேசுவினிடத்தில் என்ன இருக்கிறது?

1. அவருடைய கண்களில் ஜீவ ஒளியிருக்கிறது
2. அவருடைய குரலில் சத்திய வாக்கிருக்கிறது
3. அவருடைய கரங்களில் ராஜ்யத்தின் வேலையிருக்கிறது
4. அவருடைய இருதயத்தில் பிதாவின் அன்பிருக்கிறது

பெண்கள் பகுதி

# "...அங்கே தம்மூசுக்காக அழுது கொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்" (எசேக்கியேல் 8:14,15)

**ரேச்சல் நாயகம்**

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு ஸ்தோத்திரங்களும், வாழ்த்துக்களும் கூறிக்கொள்கிறேன். அருமையானவர்களே! நம் தலைப்பு பார்ப்பதற்கு கொஞ்சம் வித்தியாசமானதாகவும், ஏன் இத்தலைப்பு என்பது போல் தோன்றும். சரி, நாம் அனைவரும் சேர்ந்து கர்த்தர் நமக்கு கொடுக்கும் பாடத்தை கற்றுக் கொள்வோம். தம்மூஸ் பாபிலோனியக் கடவுள். **என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்** என்பது நம்முடைய தேவன் கொடுத்த கட்டளைகளுள் தலையானது, முக்கியமானது. தேவன் அதை முக்கியமாக எதிர்பார்க்கிறார். விரும்புகிறார். இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல இன்றைக்கும் நம்மிடம் எதிர்பார்க்கும் குணாதிசயங்களுள் தலையானது அவரை மாத்திரம் தான் நாம் தேவனாக ஏற்று, நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டும் என்பது. அவ்வாறு செய்யும் போதுதான் தேவன் நம்முடன் இருப்பார். அவருடைய மகிமை நம்மேல் இருக்கும். ஆனால், பழைய ஏற்பாட்டில் எண்ணற்ற முறையாய் அவர் ஜனமாகிய இஸ்ரவேல் அந்நிய தேவர்களை நமஸ்கரிப்பதும், தண்டனை பெற்று பின்பு மீண்டும் கர்த்தரிடம் மன்றாடித் திரும்புவதும் வாடிக்கைப் போய்விட்ட ஒன்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

அப்படியொரு சமயம் தன் மக்கள் தன்னை மறந்து, அந்நிய காரியங்களை செய்ததை அறிந்த தேவன் தீர்க்கதரிசிகளின் காலத்தில் எசேக்கியேல் தீர்க்கதரிசியிடம் தன் அங்கலாய்ப்பை வெளிப்படுத்துகிறார். [எசே 8:6] என் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு என்னை தூரமாய்ப் போகப்பண்ணும்படியான இஸ்ரவேல் வம்சத்தார் இங்கே செய்கிற மிகுந்த அருவருப்புகளைக் காண்கிறாய் அல்லவா? என்று சொல்லி தேவன் அங்கலாய்த்தார். **அப்பொழுது இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கேருபீன் மேலிருந்தெழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வந்து, சணல் நூல் அங்கிதரித்து...** [எசே 9:3] [10:18,19] கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் வாசற்படியை விட்டுப் புறப்பட்டு கேருபீன்களின்மேல் நின்றது. அப்பொழுது கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து, என் கண் காண பூமியை விட்டு எழும்பின. அவைகள் புறப்படுகையில் சக்கரங்களும் அவைகளுக்குச் சரியாய்ச் சென்றன. கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு வாசலிலே போய்

நிற்க, இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அவைகளின் மேல் உயர இருந்தது. கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவிலிருந்தெழும்பி, நகரத்திற்கு கிழக்கே இருக்கிற மலையின்மேல் போய் நின்றது. (எசே 11:22,23).

**ஏன் கர்த்தருடைய மகிமை விலகி தூரமாய் போனது?**

காரணம் 1: நடையிலே எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் (8:5) இஸ்ரவேலின் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும் அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும் தூப கலசத்தை தங்கள் கைகளில் பிடித்து தூபங் காட்டினார்கள் அந்த விக்கிரகங்களுக்கு (8:11)

2. கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டுபோனார். இதோ, அங்கே தம்மூசுக்காக அழுது கொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்.

3. கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே, ஏறக்குறைய இருபத்தைந்து புருஷர் தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்திற்கும் தங்கள் முகத்தைக் கீழ்த் திசைக்கும் நேராகத் திருப்பின வர்களாய்க் கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள் (8:16).

இதுதான் முதல் தடவையல்ல, இஸ்ரவேலருக்கு விக்கிரக வணக்கம் என்பது முதல்முறையாக விக்கிரகம் என்ற வார்த்தை ஆதி 31:19-ல் **லாபான், தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கப் போயிருந்தான்; அந்த சமயத்திலே ராகேல் தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிக்கொண்டாள்.** சுரூப வழிபாடு இருந்திருக்கிறது.

ஒருவேளை, விக்கிரக வழிபாட்டைப் பற்றி படிப்பது அவசியமா? என்று கூட நீங்கள் நினைக்கலாம். ரோமர் 15:4-ல் அப். பவுல் எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது என்றார். அதன்படி நமக்கு என்ன பாடம் கற்றுக்கொள்ள முடியும் என்பதை காண்பதே இதன் நோக்கம்.

**விக்கிரகம் என்றால் என்ன ?** மூன்று விளக்கங்களை நாம் காணலாம்.

1. வழிபடுவதற்காக ஏதாவது ஒரு உருவம்.
2. ஒரு பொருள் அல்லது அளவுக்கதிகமாய் விரும்பி இரசிக்கக் கூடிய ஒன்று.
3. தவறான கருத்து அல்லது எண்ணம், அதன் மூலம் நம் எண்ணத்தில் தவறிழைக்கச் செய்வது.

பழைய ஏற்பாட்டில் பல இடங்கலில் விக்கிரகாராதனை வேசித்தனத்தோடு சம்பந்தம் உடையதாய் மாறிவிட்டதை நாம் காணமுடியும் (எண் 25:1–9). விக்கிரகாராதணை செய்கிறவர்கள் தேவ ஊழியம் செய்யும் மனிதர்களை துன்புறுத்தினார்கள் (I இராஜா 19:1–3). குழந்தைகளை பலியிட்டார்கள் (எரே 7:31). புதிய ஏற்பாட்டிலும் விக்கிரகாராதனை இருந்தது. அப் 17–ல் அத்தேனியர்கள் வழிபாடுகள் பற்றி பவுல் குறிப்பிடுகிறார்.

இன்றைக்கு வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம் இருதயத்தில் விக்கிரகத்தை, அதாவது தேவனுக்கும் நமக்கும் இடையில் ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறோமா? சிந்தித்து, யோசித்துப் பார்ப்போம். கொலோசேயர் 3:5–ல் பெருளாசை என்னும் விக்கிரகாராதனைப் பற்றி வாசிக்கிறோம். எரேமியாவில் பார்த்த ஸ்திரீகள் எகிப்திலிருந்து அழகாக வழிநடத்தி வந்து, ஆசரிப்புக் கூடாரம் பற்றி நன்கு தெரிந்து, எருசலேம் தேவாலயம் கிடைத்தவுடன் தேவனை மறந்து பாபிலோனிய தேவதையாகிய தம்மூசுக்காக ஆலய வாசலில் உட்கார்ந்து அழுதார்கள். எனவேதான் தேவனுடைய மகிமை அங்கிருந்து கடந்து போயிற்று. தேவனுடைய ஆலயமாக இருக்கும் நாம் நம்மில் உள்ள தேவ மகிமையை இழந்து போகக்கூடாது. தேவனை மறந்துவிட்டு, விசுவாசத்தை தொலைத்து விட்டு தம்மூசுக்காக அழுது கொண்டு காலத்தை வீணடித்து விடக்கூடாது. நம் தேவன் பெரியவர். நம்மையும் தேவனையும் யாரும், எதுவும் பிரிக்க அனுமதிக்க கூடாது. தேவன் அருவருப்புகளை பார்க்கக்கூடாமல் வெகு தூரம் சென்றுவிட்டதைப் போல் நம்மை விட்டும் அவர் சென்றுவிட நாம் அனுமதி கொடுக்கவே கூடாது. அவர் நம்மில் வாசஞ்செய்ய வேண்டும்.

நம்முடைய சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு பாவத்தை பிறப்பித்து, மரணத்தைப் பிறப்பித்து விடக்கூடாது (யாக் 1:13–15). மாறாக, யாக் 4:8ன் படி தேவனிடத்தில சேர்ந்தால் அப்பொழுது அவர் நம்மிடத்தில் சேருவார். அப்படிச் செய்ய ஜெபிப்போம். ✝

---

தேவன் உதவி செய்வார்! ஆமென்!!

வாலிபர் பகுதி

# தேவனுடைய சித்தம்

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதரர்களே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்திலே அன்பான வாழ்த்துக்கள். நாம் நிற்பதும், நிர்மூலமாகாதிருப்பதும் அவருடைய கிருபையே. தேவனுடைய வார்த்தைகள் நம்மை எல்லா விதத்திலும் காத்து வழிநடத்த வல்லமை உள்ளதாக இருக்கிறது. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் உதவக்கூடிய தன்மை கொண்டது தான் தேவனுடைய வார்த்தை. அப்படிப்பட்ட வேத வார்த்தைகளை நாம் வாசிக்கவும், கடைபிடிக்கவும் மிக முக்கியமாக பிறருக்கு அவைகளைக் கொண்டு உதவவும் பயன்படுத்த வேண்டும்.

என்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் என்ன என்ற கேள்வியும் யோசனையும் நம்மில் பலருக்கு, பலமுறை வந்து இருக்கும். அதை தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையும் ஆர்வமும் வாழ்க்கையின் பல கட்டங்களில் இருந்திருக்கும். இந்தக் கேள்விக்கான பதிலை வேதாகமத்தின் துணைகொண்டு நாம் கண்டுகொள்ள முயற்சி செய்யலாம். ரோமர் 12: 1,2 ல் **அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தம் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை, நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்** என்று வாசிக்கிறோம். இந்த இரண்டு வசனங்களின் வழியாக இந்தக் கேள்விக்கான பதிலை நாம் கண்டு கொள்ள முயற்சி செய்வோம். முதலில் 2 வது வசனத்தை கவனித்து, பின்பு 1ம் வசனத்தை பார்க்கலாம்.

தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று **பகுத்தறியத்தக்கதாக** என்று வாசிக்கிறோம். பகுத்தறிதல் என்று சொன்னால், நம்முடைய சிந்தை, செயல் ,நடக்கை என்று அனைத்திலும் நன்மை தீமை எது என்று தீர்மானிக்கப்பட்டு அதனடிப்படையில் செயல்படுவதாகும். அப்படி

செயல்படுவதற்கு நாம் தேவனாலே சுதந்திரம் பெற்று இருக்கிறோம். உதாரணமாக, ஆதியாகமம் 4ம் அதிகாரத்தில், காயின் தேவனாலே அறிவுறுத்தப் படுகிறான். நீ நன்மை செய்தால் மேன்மை உண்டு என்றும், நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் என்றும் கூறி, இவ்விரண்டில் எதை தீர்மானிக்க வேண்டும் என்ற சுதந்திரத்தை தேவன் அவனிடம் கொடுத்தார். ஆக பகுத்தறிதல் என்பது, தேவனுடைய வசனங்களின் அடிப்படையில் நம்முடைய சிந்தனைகளை, செயல்பாடுகளை, நடத்தைகளை சீர்தூக்கிப் பார்ப்பதாகும்.

**தேவனுடைய சித்தம்**, நன்மையானதும், பிரியமானதும் பரிபூரணமானதுமாக இருக்கிறது என்று காண்கிறோம். நீதிமொழிகள் 14:12 ல், மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு. ஆனால், அதன் முடிவு பாவமும் அதன் விளைவாக வரும் மரணமே என்று வாசிக்கிறோம். தேவனுடைய சித்தத்தையும் மனிதனுடைய விருப்பத்தையும் நாம் ஒன்று போல கையாள முடியாது. தேவனுடைய சித்தம் நன்மையானதும், பிரியமானதும், பரிபூரணமானதுமாக இருக்கிறது. ஆனால், மனிதனுடைய காரியங்கள் மரணத்தை விளைவிக்கிறது.

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்** –

நம்முடைய சிந்தனைகள், செயல்பாடுகள் யாவும், எதனாலே தீர்மானிக்கப்படுகிறது? இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் என்பது நம்முடைய சிந்தனைகள், செயல்பாடுகள் யாவும் நாம் வாழ்கின்ற சமுதாயத்தினாலே, அல்லது நம்முடைய நண்பர் கூட்டத்தினாலே தீர்மானிக்கப்படுதல் ஆகும். இந்த உலகம் என்பது நிரந்தரமானது அல்ல. நாம் வாழ்கின்ற பூமியும், அதில் உள்ள யாவும் அதில் அடக்கம். 1 யோவான் 2:17 ல், உலகமும் அது நிச்சயம் ஒழிந்துபோகும் என்று வாசிக்கிறோம். எனவே, உலகத்தின் காரியங்களினாலே ஈர்க்கப்பட்டு, அதன் இச்சைகளுக்கு உடன்படாமல், நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**மனம் புதிதாகுதல்** –

நம்டைய மனது புதிதாகப்படவேண்டும். புதிதாகுதல் என்பது 2 அர்த்தத்தை குறிக்கிறது. முதலாவது, பாவத்தின் பிடியில் இருந்து கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் மீட்கப்படும் பொழுது புதிதாக்கப்படுகிறோம். இரண்டாவது, அவருடைய வார்த்தைகளினால் புடைக்கப்பட்டு நாளுக்கு நாள் நம்முடைய உள்ளான மனிதன் புதிதாக்கப்படுகிறான்.( எபேசியர் 4:24, கொலோசெயர் 3:10, 2 கொரிந்தியர் 5:17)

**தொடரும்...**

சிறுவர் பகுதி

# கிறிஸ்தவ நடைப்பயணம்

Dr. பிரெய்ஸி

ஹலோ, குழந்தைகளே! தேவனுடைய கிருபையினால் நீங்கள் அனைவரும் நலமாக உள்ளீர்கள் என்று நம்புகிறோம். 10 நாட்கள் விடுமுறைக்குப் பிறகு பள்ளிக்கு திரும்புவது எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும். இந்த மாதம் கிறிஸ்தவ நடைப்பயணம் பற்றி பார்ப்போம்.

எபேசியர் 5ல், நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய சுமார் 3 வகையான நடைகளைப் பார்க்கிறோம். முதலில் 1,2 வசனங்களில் **அன்பில்** நடப்பதைப்பற்றிப் பார்க்கிறோம். நாம் தேவனை பின்பற்றி, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்மாதிரியாகக் கொண்டு அன்பில் நடக்க வேண்டும், அவர் நம்மை மிகவும் நேசிக்கிறார். எபேசியர் 5:8 – 11ல் நாம் **ஒளியின்** குழந்தைகளாக நம் தேவனுக்கு பிரியமானதைக் கற்றுக் கொண்டு, எல்லாத்தீமைகளையும் அப்புறப்படுத்தி நடக்க வேண்டும் என்று பார்க்கிறோம். நம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து சரியானதைச் செய்ய வேண்டும், தீமை செய்பவர்களுடன் உறவு வைத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

அதுபோலவே எபேசியர் 5:5 – 17ல், காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொண்டு **ஞானமாக** நடக்க வேண்டும் என்று பார்க்கின்றோம். அவருடைய விருப்பத்தைப் புரிந்து கொண்டு, அதன்படி செய்ய அவருடைய வார்த்தையைப் படிக்க வேண்டும். என் அன்பாக குழந்தைகளே, பூமியில் பரிபூரணமாக வாழ்ந்த நம் ஆண்டவரை இயேசுவைப் பின்பற்றி அன்பிலும், ஒளியிலும், ஞானத்திலும், நடக்க மறக்காதீர்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுவோமாக!

அதிக அன்புடன்
ப்ரைசி அக்கா!

**GOD BLESS YOU**

## கேள்விகள் :

1. ஒரு கிறிஸ்தவராக நாம் நடக்க வேண்டிய மூன்று நடைகள்?

2. நாம் யாரைப் பின்பற்ற வேண்டும்?

3. தேவனுடைய ராஜ்ஜியத்தில் யாருக்கு சுதந்திரம் இல்லை?

4. நாம் என்ன புரிந்துகொள்ள வேண்டும்?

5. நாம் மற்றவரை எப்படி நேசிக்க வேண்டும்?

## நாளும், நடப்பும்

1. ஒரே நாடு ஒரே திட்டம், பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

2. காவலர்களை கண்கானிக்க ஸ்மார்ட காவலர் என்ற புதிய செயலி தொடங்கிவைத்தார் – D.G.P. சைலேந்திர பாபு.

3. உக்ரைன் ரஷ்யா போர் மீண்டும் ஆக்ரோஷமாக நடந்து வருகிறது.

4. பார்வையற்றோரும் திருக்குறள் படிக்கும் வகையில் 46 நூல்கள் ப்ரைலி வடிவில் உருவாக்கம்.

5. உலக துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

# தேவ பக்திக்குரிய இரகசியம்

*பென்னி மார்ட்டின்*

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்களே, உங்கள் யாவருக்கும் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் வாழ்த்துக்கள். நம் அன்றாட வாழ்வில் யாரோ ஒருவர் ஆரோக்கியத்திற்கான, பொருளதார வளர்ச்சிக்கான, ஆனந்தத்திற்கான இரகசியத்தை உங்களுக்கு சொல்லப் போகிறேன் என்று சொன்னால் அந்த இரகசியம் என்னவென்று அறியும் வரை அலை பாயும் மக்கள் மனம். இரகசியம் என்னும் வார்த்தைக்கு தொன்று தொட்டே ஒரு தொடர்பும், ஓர் ஈர்ப்பும் இருக்கத்தான் செய்கிறது. பக்தி என்பது மனிதனுடைய உடலோடும் உள்ளத்தோடும் உணர்வோடும் இரண்டறக் கலந்த ஒன்றாகவே காணப்படுகிறது. ஆனால், தேவ பக்தி அதிலிருந்து வேறுபடுகிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவ பக்தியை விசுவாசத்தோடு வெகுவாக வெளிப்படுத்த கட்டளையிடப் பட்டிருக்கிறோம். ஆனால், வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்திக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து திரிவது வேதனையை அளிக்கிறது.

சரி பிரியமானவர்களே, நாம் தலைப்பில் காணும் தேவ பக்தியின் இரகசியம் என்னும் சொற்றொடர்1 தீமோத்தேயு 3:16 ல் இடம் பெற்றிருக்கிறது. இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் தேவ பக்திக்குரிய இரகசியமானது எவ்வித முரண்பாடுமின்றி, விவாதமுமின்றி எல்லாரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது என்று அறிவிக்கிறார். இங்கே இரகசியம் என்னும் பதம் ஏதோ புரியாத புதிர் என்னும் பொருளைக் கொடுக்காமல் அல்லது மொழிபெயர்க்கப்படாமல் ஒரு காலக்கட்டத்தில் மறைக்கப் பட்டிருக்கிற ஒன்று இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றுதான் மூல மொழியில் பொருள் கொடுக்கிறது. இவ்வார்த்தை கிறிஸ்து இப்பூமியில் மனித இனத்துக்கு இரட்சிப்பை நல்க வந்ததோடு தொடர்பு படுத்தப்படுகிறது. 1 தீமோத்தேயு 3:16 ல் பயன்படுதத்தப்பட்டிருக்கிற ஆறு சொற்றொடர்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது தேவ பக்திக்குரிய இரகசியத்தைக் குறித்து நாம் தெளிவடைந்து விடுவோம். இப்போது வேதத்தின் வெளிச்சத்தில் நாம் இவ்வசனத்தைக் காண்போம்.

**1. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்**

இது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய மனிதனாக இவ்வுலகத்தில் அவதரித்ததைத்தான் குறிக்கிறது (யோவான் 1:1–3,14). இது இப்பூமியில் மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்து தேவன் என்று தெளிவுபடுத்துகிறது. ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாக பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார் (எபிரெயர் 2:14 15). உண்மையாகவே, நம்முடைய பாவங்களை தம்முடைய சரீரத்தில் சுமந்து நாம் ஆவிக்குரிய பிரகாரமாக சுகமடைவதற்கும், நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கும் பாவம் அறியாத கிறிஸ்து நமக்கு அனுமதி கொடுத்தார். மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைப் பண்ணாத, விசுவாசியாத இரக்கமற்ற இருதயங்கள் இப்பூமியில் இருக்கத்தான் செய்கின்றன. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. (1 யோவான் 4:3).

**2. ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.**

இவ்வசனப் பகுதியில் ''நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்'' என்பது இயேசு தமக்கு எதிராக வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்தும், பழிகளிலிருந்தும் பரிபூரணமாக விடுவிக்கப்பட்டார் என்றுதான் பொருள்படுகிறது. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பல விதங்களில் தவறாக குற்றஞ்சாட்டப்பட்டார் (மத்தேயு 11:19; 12:24), பாவமறியாத அவர் அநியாயமாக அக்கிரமக்காரராலே கொல்லப்பட்டார். (அப்போஸ்தலர் 2:22,23). இருந்தபோதிலும் இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவராலே எல்லாக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் குற்றமற்றவராக தீர்க்கப்பட்டார். இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார் (மத்தேயு 3:66); கிறிஸ்து பரிசுத்த ஆவியானவராலே பிசாசுகளைத் துரத்தினார் (மத்தேயு 12:28) பிதாவகிய தேவன் இயேசுவுக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். (யோவான் 3:34).இயேசு கிறிஸ்து பரிசுத்த

ஆவியின் வல்லமையினாலே அற்புத அடையாளங்களைச் செய்ததை பிதாவகிய தேவன் அங்கீகரித்திருக்கிறார் [அப்.2:22]; மிக முக்கியமாக பரிசுத்த முள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார் [ரோமர் 1:5].

**III. தேவ தூதர்களால் காணப்பட்டார்:**

தேவ தூதர்கள் இயேசுவின் பிறப்புத் தொடங்கி அவருடைய பூமிக்குரிய வாழ்க்கை முழுவதும் அவருக்கு பணிவிடைசெய்து அவருடைய வாழ்க்கையோடு ஒன்றியிருந்தார்கள் என்று வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கிறோம் மத்தேயு 4:11;லூக்கா 22:43;மத்தேயு 28:1-8; அப்.1:9-11 தேவ தூதர்கள் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் காணப்பட்டிருக்கிறார்கள். இந்த தேவ தூதர்கள் இயேசு கிறிஸ்துவின் ஜீவன்,மரணம்,அடக்கம்,உயிர்த்தெழுதல் மற்றும் தேவனுடைய குமாரனாக பரமேறுதலில் தேவபக்திக்குரிய இரகசியம் வெளிப்பட ஆசையாயிருந்திருக்கிறார்கள் [ 1பேதுரு 1:12]

**IV. புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்:**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் உலகெங்கும் போய்,சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார் [மத்தேயு 28:18,20; மாற்கு 16:15,16].அவர்கள் இயேசுவே கிறிஸ்துவென்று முதலில் யூதர்களிடத்தில் பிரசங்கித்தார்கள் [அப்.5:42]. அதன் பின்புதான் புறஜாதிகளிடத்தில் இயேசுவைப் பிரசங்கித்தார்கள். இவ்விதமாக கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே யூதர்களையும்,புறஜாதியாரையும் தேவனோடு ஒப்புரவாக்கினார் [எபேசியர் 2:11-17; கொலோ 1:20-23].

**V. உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்:**

இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய பிரசங்கம் வல்லமையுள்ளதாக இருந்தது [1கொரி 15:1-4]. அச்செய்தி எந்த அளவு வல்லமையுள்ளதாக இருந்ததென்றால் அது உண்மையும், நன்மையுமான இருதயங்களில் விசுவாசத்தை உண்டு பண்ணியது [ரோமர் 10:17; யோவான் 20:30,31]. அந்த முதல் நூற்றாண்டு சுவிசேஷத்திற்கு இன்றும் உண்மையும், நன்மையுமான இருதயங்களில் விசுவாசத்தை உண்டுபண்ணும் வல்லமை உண்டு. இவ்வுலகில் இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கும் ஒரு கூட்டத்தார் உலகம் உள்ளவரை இருந்து கொண்டே இருப்பார்கள்.

VI. மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்;

இது தெளிவாகவே இயேசு கிறிஸ்துவின் பரமேறின சம்பவத்தைக் குறிக்கிறது (அப்.1:9–11). அது மட்டுமல்லாமல் இது ஆச்சரிய மூட்டும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலுமாயிருக்கிறது சங்கீதம் 16:8–11;24:7–10; தானியேல் 7:13–14). உண்மையாகவே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார், இந்த அழகான சொற்றொடரில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிற காரியங்களைக் கவனியுங்கள்.கொலோ 2:14,15 வசனங்களில்கிறிஸ்து சத்துருக்களை முறியடித்து வெற்றி சிறந்திருக்கிறார்.அப்.2:33ல் அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டார் என்று வாசிக்கிறோம்.பிலிப்பியர் 2:11ல் இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் அறிக்கை பண்ணும்படிக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தேவன் அவருக்குத் தந்தருளினார்.நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 17:14).

---

## எதைக் கொடுக்க வேண்டும் ?

*பிள்ளைகளுக்கு நாம் எதைக்கொடுக்க வேண்டும் என்பதில் நாம் கவனமாயிருக்க வேண்டும். அவர்களுக்கு நாம் ஆஸ்திகளையும், ஆடம்பரபொருட்களையும் கொடுப்பதை விட அவர்களுக்கு அவசியமான அன்பை அள்ளி வழங்க வேண்டும். அவர்களோடு அதிக நேரத்தை செலவிட்டு, நாம் ஜீவனுள்ள தேவன் பேரில் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.*

---

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்
# தேவ சித்தம்

**சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை**

**முன்னுரை:**

1. தேவனுடைய சித்தம் அல்லது அவருடைய விருப்பம் என்ன என்பதை அறிந்து கெள்ளவேண்டியது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமான ஒன்று.

2. ஏனென்றால் அவரே நம்முடைய சிருஷ்டிகர், நமக்காக தம்முடைய குமாரர்ர மூலமாக பரலோக வாழ்க்கையை திட்டமிட்டவர் ,யோவா. 3 : 16 , 17

3. அவர் நம்முடைய ஆவிக்குரிய தகப்பனாயிருக்கிறபடியால் நமக்கு அதிக நன்மையானதையே அவர் தருகிறவராய் இருக்கிறார் எபி.12: 9,10.

4. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார், 1தீமோ.2:4.

**I. பிதாவையும் குமாரரான இயேசுகிறிஸ்துவையும் சரியாக அறிந்துகொள்வதும் அந்த அறிவின்படி நடப்பதும் நித்திய ஜீவனைக் கொடுக்கும் யோவா.17:3.**

A. தாவீது தன் குமாரன் சாலொமோனுக்கு சொன்ன அறிவுரை: நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தேடும் உற்சாகமான மனதோடும் சேவி; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார் என்றான், 1 நாளா.28:9.

B. தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைய வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது கொலோ.1:9,10.

C. தேவனை அறிந்தவன் மாத்திரம் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுடைய பேதனைக்குச் செவிகொடுக்கிறான், அவன் தேவனால் உண்டானவனாக இருக்கிறான் 1 யோவான் 4:6.

D. இஸ்ரவேலர் தேவனைப் பற்றிய அறிவை இழந்ததினால் தேவன் அவர்களை வெறுத்துவிட்டார் , அவர்களும் சங்காரமானார்கள், ஓசியா 13:4 ;4:6.

E. ஏனென்றால், அவர்கள் தேவனுக்கு இடம் கொடுக்கவில்லை. மேலும், அவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்து செயல்படவில்லை.

F. ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராய் இருக்கிறார், நாம் அவருக்கு இடம் கொடுக்கவேண்டும். பிலி.2:13.

**II. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவே இந்த உலகத்தில் வந்தார், (யோவா.6:38).**

A. இயேசுவானவருக்கு அவரை அனுப்பின பிதாவின் சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே போஜனமாயிருந்தது, யோவா.4:34.

B. இயேசு சொன்னார்: எனக்குச் சித்தமானதை நான் தேடாமல்,என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது,யோவா.5:30.

C பூமிக்குரிய சொந்தத்தை விட ஆவிக்குரிய சொந்தமே முக்கியமும் அவசியமுமானது என்று ஆண்டவர் எண்ணினார், இதுவும் பிதாவின் சித்தமே, மாற்கு .3:31–35.

D தேவனுடைய சித்தத்திற்கு யாரும் எதிர்த்து நிற்க முடியாது, ரோமர்.9:19.

E. தேவகுமாரரான இயேசுவானவரே கேட்டாலும், கிறிஸ்துவின் மரணத்தில் தேவன் தம்சித்தத்தை மாற்றிக்கொள்ளவில்லை, மாற்.14;35,36.

F. மரணம் (பாத்திரம்) தன்னைவிட்டு நீங்கும்படி இயேசுவானவர் கேட்டாலும் தேவன் அதை நீக்கவில்லை, அந்த அளவிற்கு தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற உறுதியானவராய் இருக்கிறார். லூாக்.22:42.

G. ஆகையால், இயேசு கிறிஸ்துவும் தேவ சித்தத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்தார்,மத்.26:42,; எபி.10:5–7.

H. தேவ குமாரனே கேட்டாலும் தேவ சித்தத்தை மாற்ற முடியாது, ஏனென்றால், அந்த திட்டத்தை அவர் நமக்காக ஏற்படுத்தினார், கலா.1:4.

**III. ஆகையால், நாம் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ள வேண்டும் (எபே.5:17).**

A. நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வாழவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது,1 தெச. 4:3;1 பேது.1:15,16.

B. கிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்து அதைப் பற்றிக்கொண்டு நடப்பது தேவ சித்தமாயிருக்கிறது,யோவா.7:17;யூதா.3.

C. இந்த வசனங்களில் தேவனுடைய சித்தம் என்பது கிறிஸ்து சொன்ன அவருடைய போதனையை கேட்டு அதன்படி நடப்பது தான், அற்புதம் அடையாளம் செய்வது அல்லது பிசாசுகளை துரத்துவது அல்ல,மத்.7:21–24.

D. ஆகையால், இன்றைக்கு நாம் செய்யக்கூடிய ஊழியம் தேவ சித்தத்தின்படி செய்யவேண்டும்,எபே.6:6.

E. கிறிஸ்தவராக வாழ்வதிலே கஷ்டம் பாடுகள் வந்தாலும் இயேசுவைப் போல நன்மை செய்து பாடநுபவிக்க வேண்டும், 1பேது.2 : 15, 21 ; 3:17.

F. தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, மனம் புதிதாகிற மறுரூபமான வாழ்க்கையை தேவன் நம்மிடத்தில் எதிர்ப்பார்க்கிறார்,ரோம.12 :2.

G. தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ் செய்த பின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டார். அப் 13:36.

**முடிவுரை:**

1. உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்பது தேவ சித்தமாயிருக்கிறது, மத். 28:18–20; மாற். 16: 15,16; லூக்.24 :37.

2. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார், இந்த தாமதத்தை நாம் பயன்படுத்தி மக்களை இரட்சிப்புக்குள்ளாக கொண்டுவர வேண்டும், 2 பேது.3 :9 ; 2 கொரி. 6:1,2.

3. எல்லா இடங்களிலும் சபைகள் உருவாக்கப்பட்டு உபதேசத்தின் படி வளர வேண்டும், எபே. 4 : 11, 12.

4. சபைகளிலே மூப்பர்கள், உதவிக்காரர்கள், சுவிசேஷகர்கள், போதகர்கள் வைராக்கியமுள்ளவர்களாக சபையை கிறிஸ்துவுக்குள் நடத்தவேண்டும், எபே.4 : 13 – 15.

5. ஒருவருக்கொருவர் உதவி செய்து இப்படி கிறிஸ்துவின் பிரமாணத்தையும், தேவ சித்த்ததையும் நிறைவேற்ற வேண்டும். எபே. 4 : 16 ; கலா. 6 : 2.

6. எல்லாவற்றிலும் நாம் தேவ சித்தத்தை செய்து வாழ்ந்தால், அவர் நமக்கு நித்திய ஜீவனை அளித்து பரலோகத்திலே என்றென்றும் அவரோடு வாழவைப்பார், யாக். 4 : 15 ; ரோம. 8 : 17 ; 1 யோவா. 2 : 25. தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## ஆசீர்வாதங்களின் ஊற்றுக்கண்

தேவன் நமக்கு எத்தனையோ ஆசீர்வாதங்களைத் தந்திருக்கிறார். தேவனிடத்திலிருந்து நான் ஓர் ஆசீர்வாதத்தைக் கூட பெறவில்லை என்று ஒருவர் கூடச் சொல்ல முடியாது. ஆனாலும், பல வேளைகளில், தேவன் எங்களுக்கு ஒரு நன்மையையும் செய்யவில்லை என்று முறு முறுப்பதை, முணுமுணுப்பதை நாம் பார்க்க முடியும். உண்மையாகவே, தேவன் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதங் களை எண்ணிப்பார்க்க நாம் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டால், நாம் கவலைப்படுவதற்கு நமக்கு நேரமே இருக்காது.

# இனி நீ பாவம் செய்யாதே

**சகோ. K.M. பிலிப். பவானி**

**அ**ன்பான திருமறை ஆசான் நேயர்களுக்கு, உயிர்த்தெழுந்த நாதர் இயேசுவின் நாமத்தில் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். யோவான் 8:1-11-ல் அடங்கிய ஒரு சரித்திரத்தை உங்கள் முன் நிறுத்துகிறேன். இயேசு மக்களோடு தேவாலயத்தில் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசித்துக் கொண்டிந்தார். அச்சமயம் வேதபாரகரும், பரியேசரும் விபச்சாரம் செய்த ஒருஸ்திரீயை இயேசுவுக்கு முன் நிறுத்தி, விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிபட்ட இந்த ஸ்திரீயை கல்லெறிந்து கொல்லும்படி மோசே நியாயப் பிரமாணத்தில் கட்டளையிட்டிருக்கிறார்; நீர் என்ன சொல்கிறீர்? என்று அமைதியாய் இருந்த இயேசுவிடம் ஓயாமல் கேட்டனர். இயேசு கிறிஸ்து மௌனத்திற்குப் பிறகு அவர்களைப் பார்த்து; உங்களில் பாவமில்லாதாவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, மறுபடியும் குனிந்து தரையிலே எழுதினார். அவர்கள் அதைக்கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு எல்லோரும் போய்விட்டார்கள். இயேசு நிமிர்ந்து பார்த்து ஸ்திரீயைத் தவிர வேறொருவரையும் காணாமல், ஸ்திரீயை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; **நீ போ! இனி நீ பாவஞ்செய்யாதே** என்றார்.

அன்பானவர்களே! இச்சரித்திரத்தில் வேதபாரகரும், பரிசேயரும் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஆண், பெண் இருவரில் ஆணை விட்டு விட்டு பெண்ணை மட்டும் இழுத்து வந்தார்கள். இதைக் குறித்து நியாயப் பிரமாண சட்டம் கூறுவதைக் கவனியுங்கள், அந்த விபச்சாரக்காரனும், விபச்சாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள், என்றும், இருவரும் கொலை செய்யப்படக் கடவர்கள், என்றும் [லேவி.20:10,11] தெளிவாய் கூறுகிறது. ஆனால், அன்று நியாய பிரமாணத்தைக் கற்றுத் தேறின வேதபாரகரும், பரிசேயரும் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஆண், பெண் இருவரையும் கையும் பிடித்து வந்திருக்க வேண்டும்? மாறாக, ஆணை விட்டு விட்டு பெண்ணை மட்டும் பிடித்து வந்ததுதான் இவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிற லட்சணமா? அப்படியென்றால், தங்களுக்கு சாதகமானதைப் பிடித்துக் கொண்டு மற்றதை விட்டுவிடுவதுதான்

கற்பனைக்கு அப்படியே கீழ்ப்படிவதா? இவர்களுக்கு மோசே ''...நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்,'' என்று திட்டமும், தெளிவாயும் கூறியது என்னவாயிற்று? (உபா 4:2) ஆனாலும், நாங்கள் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறோம் என்று இயேசுவுக்கு முன்பாகவே வேஷம் போடுகிறார்களே – இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிற இயேசுவுக்கு தெரியாதா? இதைத்தான் புதிய உடன்படிக்கையின் கடைசி ஆலோசனையாயும் எச்சரிக்கையாகவும் பரிசுத்த ஆவியானவர் நமக்காக எழுதிவைத்திருக்கிறார். '' ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டவும், எதையாகிலும் எடுத்துப்போடவும் கூடாது என்றும் அப்படி மீறி செய்தால், வாதைகளை அவன்மேல் கூட்டுவார் என்றும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் என்றும் விவரமாய் கூறியிருப்பதை விழிப்புடன் கவனியுங்கள். இப்படி இருந்தும் இன்றைய கிறிஸ்தவ மத உலகில் இந்தக் கற்பனைகளை துணிகரமாய் இயேசுவின் நாமத்தினாலேயே மீறி நடப்பதைப் பார்க்கிறோம். பாடு (கொலே 3:16) என்று வேதம் சொன்னால் இசைக்கருவிவகளை கூட்டிச்சேர்த்து பாடுவது; அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன்தன் மனதில் நியமித்தபடி கொடு என்றால் (11 கொரி : 9: 7) கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்டு சிலுவையில் அறையப்பட்டு மரித்துப்போன (எபே 2:15,16) நியாயப்பிரமாணத்தின் படியான 1/10 பாகம் கொடு என்று கட்டாயபடுத்தி வசூல் செய்வது;புதிய உடன்படிக்கையில் சொல்லியிராத பண்டிகைகளையும், தேவனால் குமாரன் மூலம் கொடுக்கப்பட்டு முத்திரிக்கப்பட்ட சத்தியமான கற்பனைகளையும் மீறும் செயலாகும். நியாயத்தீர்ப்பில் அவர்களுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்.நாம் இப்படிப்பட்ட பாவத்தை செய்யாமலிருப்போமாக.

இங்கே வேதபாரகரும்,பரிசேயரும் நியாயப்பிரமாணத்தின்படி மிகப் பெரிய குற்றம் செய்து இருக்க இவர்கள் இயேசுவின் மேல் குற்றம் சுமத்த முயற்சி செய்தார்கள். இயேசுவோ அமைதியாய் இருந்தார். மற்றவர்களளைக் குற்றப்படுத்த நினைப்பவர்கள் தன் நிலையை உணரவேண்டும்.உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல்,உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை பார்க்கிறதென்ன என்று (மத் 7 :3) இயேசு சுட்டிக்காட்டுவதை புரிந்து கொள்ளுங்கள். இருதயங்களை ஆரயந்து பார்கிற இயேசுவுக்கு முன் நாம் நிற்கிறோம் (யோவா 2:25). நம்மேல் குற்றம் சாற்றும் பொழுது முதலில் அமைதியாயிருங்கள். அது நம்மை நிதானமடையச்

செய்யும்; ஞானமாய் பேசச் செய்யும். குற்றம் சாட்டியவர்கள் தங்கள் தவறை உணரசெய்யும்; ஆபேலைக் கொன்ற காயீன் தன் குற்றத்தை மறைக்க முயற்சித்தான்; சாபத்தீடானதை தனக்கென்று எடுத்த ஆகான் அதை மறைக்க பூமிக்கடியில் புதைத்து வைத்தான். [யோசு 7:21]. ஆனால், தேவனுக்கு முன் மறைக்க முடிந்ததா? அது எவ்வளவு பெரிய சாபத்தை கொடுத்தது என்பதை நினைவில் நிறுத்துவோம். இங்கே இயேசு அவர்களைப் பார்த்து, உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதாவது கல்லெறியக்கடவன் என்று ஞானமாய் பேசினார். இந்த வார்த்தை அவர்களுக்குள் ஊடுருவியது. தங்கள் குற்றத்தை உணர்ந்தார்கள். தங்களை இயேசுவிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக எல்லோரும் போய்விட்டார் கள். ஆனால் அப் 2ல் எருசலேமில் கூடியிருந்த யூதர்கள் மத்தியில் பேதுரு பேசினார். நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசு வையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் என்று அவர் கள் செய்த குற்றத்தை எடுத்துரைத்தார். இதைக்கேட்டு இருதயத் தில் குத்தப்பட்ட 3000 பேர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டார்கள். தேவையில்லாமல் உங்களை குற்றப்படுத்துகிறவர்கள் மேல்கோபம், எரிச்சலடையாதீர்கள். மாறாக, அமைதியாய் சுவிசேசத்தை பிரசங்கியுங்கள். அவர்கள் மனந்திரும்பும் வாய்ப்பை உருவாக்குங்கள். அதுவே பூமியிலும்,பரலோகத்திலும் சந்தோசத்தை உண்டாக்கும்.

பிரியமானவர்களே! இப்பொழுது இந்த ஸ்திரீயின் நிலையைக் கவனிப்போம்.மரணபயத்தோடு அங்கு வந்தாள். மேலும், பரிசுத்தராகிய இயேசுவுக்கு முன்நிற்பது அதிக நடுக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆகவே, வாய்ப்பை பயன்படுத்தி அவளும் போயிருக்க முடியும்.தொடர்ந்து தன் பாவத்தை செய்து பிழைத்திருக்க முடியும். ஆனால், இவள் இயேசுவுக்கு முன் நின்று கொண்டிருந்தவளுக்கு இயேசுவின் ஜீவவார்த்தை ஜீவனைக் கொடுத்தது.மீட்பரின் வார்த்தையால் சாவினின்று மீட்டெடுக்கப்பட்டாள். இவள் இயேசுவின் கிருபையினால் தன் பாவங்களை உணர்ந்தவளாய், தன்னைத் தாழ்த்தி இயேசுவுக்கு முன் நின்று கொண்டிருந்தாள் என்பதே சரியாயிருக்கும்.ஏனெனில் இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரியைப் பார்த்தார்.அவள் உள்ளத்தை ஆராயந்தறிந்த இயேசு அவள் பாவங்களையெல்லாம் மன்னித்தபடியால் அவளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை. மேலும், அவள் பரிசுத்தாமாய் வாழ, நீ போ இனி நீ பாவம் செய்யாதே என்ற கருணை மிக்கதான கட்டளையைக் கொடுத்தார்.

அன்பான தேவ மக்களே ! தாவீது பத்சேபாளிடத்தில் செய்த பாவத்தை தேவன் சுட்டிக் காட்டியபோது தாவீது உடனே தன்னைத் தாழ்த்தி,நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும்,அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும்,அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன் என்று தன்னை ஒப்புக்கொடுக்கிறதைப் பார்க்கிறோம் [சங் 51:7].

இயேசுவோடு நடந்த சகேயு நின்றான். **தன்னை உணர்ந்தான்;** பாவத்தை அறிக்கையிட்டான். அவன் இரக்கம் பெற்று ஆபிரகாமின் பிள்ளையாக சோத்துக் கொள்ளப்பட்டான். அன்பானவர்களே! தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். [நீ 28:13]. என்பதை நாம் அறிந்து புரிந்து வைத்திருக்கிறோம். ஒரு முறை நம் வாழ்கையில் பாவமன்னிப்பை அனுபவித்திருக்கிறோம். தொடர்ந்து நாம் பாவம் செய்யலாமா? இனி நீ பாவம் செய்யாதே, என்பது நமக்கும் பொருந்தும் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள்.

இயேசு ஸ்திரீயை நோக்கி, நீ போ என்றார். அவள் எங்கே போவாள்? மீண்டும் அதே பாவம் சூழ்ந்த உலகத்திற்குள்தான் போகவேண்டும். மீண்டும் பாவம் செய்ய வாய்ப்புண்டு. ஆகவே தான், நீ போ, ஆனால் நீ யாராய் இருக்கவேண்டும்? என்பதைத்தான் இனி நீ பாவம் செய்யாதே என்ற உயர்வான ஆலோசனையைக் கொடுத்தார்.பாவம் நம் சந்தோசத்தை, சமாதானத்தை, தேவ உறவைக் கெடுத்துப்போடும். ஆகவே, எச்சரிக்கையாயிருந்து வாழ்கையில் பாவம் தொடராமல் இருக்க பாவத்திற்கு விலகி ஜீவிக்க வேண்டும்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் அனலாயிருக்க வேண்டும். பிரியமானவர்களே! இது நமக்கு கொடுக்கப்படட கிருபையின் காலம். இதில் உலகம் தரும் தண்டனைக்குத் தப்பலாம், ஆனால் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்புக்கு தப்ப முடியாது. ஆகவே இரட்சிக்கப்பட்ட தேவஜனமாகிய நாம் இனி பாவம் செய்யாமலிக்க சத்திய வசனத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படிந்து நம்மை பரிசுத்தமாய் காத்துக் கொள்வோம். இனி நீ பாவம் செய்யாதே என்ற இயேசுவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்ட அந்த ஸ்திரீ நிச்சயம் பாவத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருந்திருப்பாள். அவள் ஒரு மார்த்தாளாக, மரியாளாக, லீதியாளாக ஒரு கிறிஸ்தவளாக வாழ்ந்திருக்கமுடியும். ஏனெனில், கிறிஸ்துவின் வார்த்தைக்கு ஜீவனும் , வல்லமையும் உண்டு. நாமும் கிறிஸ்துவின் அன்பை, ஈவை ருசி பார்த்திருக்கிறோம். இனி நான் பாவம் செய்ய மாட்டேன் என்றதொரு நல்ல தீர்மானத்தோடு வாழ்வோம்.தேவ ஒத்தாசை எப்பொழுதும் நம்மோடிருக்கும். ஆமென்!

# விருத்தசேதன உடன்படிக்கை.

Bro.**பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! விருத்த சேதனம் என்ற வார்த்தை முதன்முதலாக தேவன் ஆபிரகாமிடம் செய்த உடன்படிக்கையாகப் பார்க்கிறோம். தேவன் அவனை தெரிந்துகொண்டதற்கு அடையாளமாக அவன் சந்ததியில் பிறக்கும் ஆண்பிள்ளைகள் பிறந்த எட்டாம் நாளில் நுனித்தோலை அகற்றிவிடுவதே இந்த உடன் படிக்கையாக இருக்கிறது [ஆதி 17:12] இதை செய்த போது ஆபிரகாமுக்கு 99வயதும் அவன் மகன் இஸ்மவேலுக்கு 13 வயதுமாயிருந்தது. இருவரும் ஓரே நாளில் விருத்த சேதனம் பண்ணப்பட்டனர். தேவன் கட்டளையிட்ட பிரகாரம் ஈசாக்கு தான் பிறந்த எட்டாம் நாளில் விருத்த சேதனம் பண்ணப்பட்டு சுதந்தரவாளி மகனாக இயேசுவுக்கு ஒரு முன் அடையாளமானான். இது இஸ்ரவேலருடைய வாழ்க்கையில் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் நமக்கு இப்போது என்ன சம்மந்தம் என்று பார்ப்போம்.

நித்தியக் கட்டளையாகக் கொடுக்கப்பட்டதை இஸ்ரவேலர் தங்கள் குடும்பங்களில் பின்பற்றி வந்தனர். ஆபிரகாமின் பேரன் யாக்கோபு காலத்தில் அவனுடைய பிள்ளைகள் தங்கள் தங்கை அத் தேசத்து பிரபுவால் தீட்டுப்பட்ட போது இந்த உடன்படிக்கையை பயன்படுத்தி எதிரிகளை பழிவாங்கினார்கள். [ஆதி 34:15] மோசேயின் காலத்தில் மீதியான் தேசத்து ஸ்திரீ சிப்போராளை விவாகம்பண்ணி பிள்ளை பெற்றிருந்தான். பின்பு தேவன் அவனை மீண்டும் எகிப்துக்கு போகச் சொன்னார். வழியில் கர்த்தர் மோசேயைக் கொல்லப்பார்த்தார் என்றும், விருத்தசேதன உடன்படிக்கையை மோசேயிடம் கேள்விப்பட்டிருந்த அவன் மனைவி உடனே ஒரு கருக்கான கல்லை எடுத்து தன் மகனின் நுனித்தோலை நறுக்கி மோசேயின் கால்களுக்கு முன்பாக எறிந்து நீர் எனக்கு இரத்த சம்மந்தமான புருஷன் என்றாள். [யாத்4:25] இது இந்த உடன்படிக்கையின் அவசியத்தை உணர்த்துகிறது.

எகிப்தில் அடிமைகளாய் இருந்த போதும் இந்த உடன்படிக்கையை இஸ்ரவேலர் பின்பற்றியிருக்கிறார்கள். எப்படியெனில் 40 வருட வனாந்திர பிரயாணத்தில்தான் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்ய முடியாமற்போனது. ஆகையால், அவர்களுடைய சந்ததி **யோர்தானைக் கடந்தவுடன்** தேவக்கட்டளைபடி யோசுவா அவர்களுக்கு விருத்த சேதனம்

பண்ணுவித்தான் [யோசு5.5] இப்படி இந்தக் கட்டளை முக்கியமாகப் பின்பற்றியதற்குக் காரணம் இது தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள உறவுக்கு அடையாளமாகவே கொடுக்கப்பட்டது. [ஆதி17:11] நித்திய உடன்படிக்கை என்று சொல்லப்படுவதால் இந்த விருத்த சேதனம் தான் புதிய ஏற்பாட்டின் **ஞானஸ்நான உடன்படிக்கைக்கு** முன் அடையாளமாக இருக்கிறது [கொலே 2:11,12] இது தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன் படிக்கையாக இருக்கிறது என்கிறார் பேதுரு [1 பேது 3:21].

எப்படி இது பிறந்த எட்டாம் நாளில் செய்யப்பட வேண்டும் என்ற விதிமுறை உள்ளதோ அதைப் போல ஞானஸ்நானமானது யார் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசிகளாகி, மனந்திரும்பி இயேசுவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிடுகிறவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்பது நாம் அறிந்தது ஒன்றாகும். மேலும், தேவன் ஆபிரகாமிடம் சொன்னதைப் போல ஞானஸ்நானமானது இப்போதும் நமக்கும் தேவனுக்கும் இடையே உள்ள ஐக்கியத்திற்கு அடையாளமாகவே இருக்கிறது. ஏனெனில், நாம் பெற்றிருப்பது இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனம் [ரோமர் 2:29] அது போல இந்த உடன்படிக்கையை மீறின ஆத்துமா தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போவான் [ஆதி 17:14] என்றதைப்போல ஆண்டவர் ஞானஸ்நானத்தைப் பற்றி சொல்லும் போது விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்கு உள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார்.[மாற்கு 16:16]

சிம்சோனின் பெற்றோர் அவனிடம் விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடம் பெண் கொள்ளக்கூடாது [நியா14:3] என்று கண்டித்தது போல தற்போது அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக [2கொரி 6:14] என கண்டிக்கிறது அப்போஸ்தலர் உபதேசம். தாவீது, யோனத்தான் போன்றவர்கள் தங்கள் எதிரிகளை விருத்த சேதனமில்லாதவர்கள் என்று சொல்லி பயப்படாமல் விசுவாசமாயிருந்தனர். நாமும் அந்நிய ஜனங்களுக்குப் பயப்படாமல் இருக்க இது நமக்கு உற்சாகமளிக்கிறது. மேலும், சவுல் மரித்தபோது புலம்பல் பாடின தாவீது இச்செய்தி விருத்த சேதனமில்லாதவர் கேட்டுக் களிகூராதபடி வெளியே அறிவிக்கவேண்டாம் என்றார். இதிலிருந்து நாம் நம் சபை சகோதர சகோதரிகளின் காரியங்களை வெளி ஆட்களிடம் குறைபேசக் கூடாது என்ற பாடத்தைக் கற்கிறோம்.

மதுபானம் பண்ணுகிறவன் விருத்த சேதனமில்லாதவன் [ஆபகூக் 2:16, எபேசி 5:18] சரீரப்பிரகாரமான விருத்த சேதனத்தை விட தேவகற்பனைகளைக் கைக்கொள்வதே காரியம் [1 கொரி 7:19] அன்பினால் கிரியைச் செய்யும் விசுவாசமே உதவும் [கலா 5:2] இன்னும் புது சிருஷ்டியே காரியம் [கலா 5:6,6:15] போன்ற வசனங்கள் ஒரு கிறிஸ்தவனுக்கு ஞானஸ்நானம் மாத்திரம் போதாது என்றும், கிரியை செய்யும் விசுவாசம் வசனத்தைக் கைக்கொண்டு புது சிருஷ்டியாய் வாழ்வதே முக்கியம் என்பதை உணர்த்துகிறது. வணங்காக் கழுத்துள்ளவர்களே இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே... [அப் 7:51] என்று ஸ்தேவான் யூத ஜனங்களை கடிந்து கொண்டார். ஆகவே, மாம்சத்தின் மேல் நம்பிக்கையாய் இராமல் ஆவியினாலே ஆராதனை செய்து கிறிஸ்துவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள் [பிலி 3:3] தேவ ஆசீர் நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ✝

## மிகச் சிறந்த ஆயுதம்

நம் வாழ்க்கையில் எப்படிப்பட்ட பைகளை நாம் சுமந்து கொண்டு செல்கிறோம், எப்படிப்பட்ட கருவிகள் அல்லது ஆயுதங்களை நாம் பயன்படுத்துகிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. எங்கேயும் எப்போதுமே தரமான ஆயுதமாக நம்மால் சுமக்கப்படவேண்டும்! எல்லா சூழ்நிலைகளிலும் மனிதனுடைய தேவைகள் சந்திக்கும் ஒரே ஆயுதம் வேதாகமம் தான்.

வேதாகமத்தை உங்கள் வாழ்வின் ஓர் அங்கமாக ஆக்குங்கள். அதை சுமந்து செல்லுங்கள், வாசியுங்கள், படியுங்கள் அதின்படி வாழுங்கள் ! இன்று வேதாகமம் பலருடைய ஜீவியங்களில் பயன்படுத்தப்படாத, அறியப் படாத, விரும்பப்படாத ஒன்றாக ஆகிவிட்டதுபோல் ஆகிவிட ஒருபோதும் அனுமதிக்க வேண்டாம்.

# 25 – ம் வேதாகமக் கருத்தரங்கின் கருத்தாளர்கள்



சகோ. E.Z.S.ராஜநாயகம்



சகோ. தேவப்பிரியம்



சகோ. K.பாண்டியன்



சகோ. ஹென்றி மோகன்



சகோ. ஜேக்கப்



சகோ. ரிக்கி



சகோ. K.M பிலிப்



சகோ. சம்மா

மலைக் கூட்டத்தின்போது ...



சகோ. இளையராஜா



சகோ. சர்லோ

**25 – ம் வேதாகமக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்**
**(அக்டோபர் 04,05–2022)**

**"Registered" with RNI No: TNTAM/2006/20446**
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# புதிய நூல்கள் வெளியீட்டின் போது...










Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.